# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

## துறைத் தேர்வுகள் - டிசம்பர் - 2014

### அறிவிக்கை

2014-ஆம் ஆண்டு 'டிசம்பர்' மாதம் நடைபெறவிருக்கும் துறைத்தேர்வுகளுக்கு விண்ணப்பதாரர்களிடமிருந்து இணையதளம் மூலமாக மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. (விண்ணப்பப் படிவங்கள் தேர்வாணையத்தால் வழங்கப்பட மாட்டாது)

தேர்வின் பெயர் : துறைத் தேர்வுகள் டிசம்பர் - 2014 (விளம்பர எண். 396 )
அறிவிக்கை நாள் : 01.09.2014
முடிவு நேரம் மற்றும் நாள் : 30.09.2014 5.45 பி.ப.
தேர்வின் தேதிகள் : 23.12.2014 முதல் 31.12.2014 வரை(25.12.2014 கிறிஸ்துமஸ் விடுமுறை நாள் தவிர)
தேர்வு கட்டணம் : பதிவு கட்டணமாக ரூ.30/-ம் அஞ்சலக கட்டணம் ரூ.12/- ம் சேர்த்து விண்ணப்பிக்கும் தேர்வுக்கான கட்டணமும் செலுத்தப்பட வேண்டும் . (முழு விவரங்களுக்கு)

இணைப்பு - I விண்ணப்பதாரர்களுக்கான குறிப்புரைகள்
இணைப்பு- II - தேர்வுகளுக்கான கட்டணம்
இணைப்பு- III - அஞ்சலகங்களின் பட்டியல்

குறிப்பு:-

இணைப்பு I முதல் III வரை உள்ள விவரங்களை தேர்வாணைய இணையதளம்: **www.tnpsc.gov.in** காண்க.

**விண்ணப்பதாரர்கள் தங்களின் தனித்துவ விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியை குறிப்பிட்டு தேர்வாணைய இணையதளத்தில் தங்களது நுழைவுச்சீட்டினை 17.12.2014 முதல் 31.12.2014 வரை பதிவிறக்கம் (Download) செய்துக்கொள்ளலாம்.**

தேர்வின் கால அட்டவணை: முற்பகல் தேர்வு காலை 9.00 மணிக்கும் பிற்பகல் தேர்வு மதியம் 2.30 மணிக்கும் தொடங்கும். (தேர்வின் கால அட்டவணை இணைக்கப்பட்டுள்ளது.)

இத்துறைத் தேர்வுகளின் முடிவுகள், தேர்ச்சி பெற்றவர்களின் பதிவெண்கள், பெயர், முகவரி ஆகியவை அடங்கிய முழுவிவரப்பட்டியல் 07.03.2015 மற்றும் 16.03.2015 ஆகிய நாளிட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செய்தி வெளியீட்டில் வெளியிடப்படும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செய்தி வெளியீட்டின் படிகளை உரிய தொகையினைச் செலுத்தி "எழுது பொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநர், வெளியீட்டுக் கிடங்கு, அண்ணா சாலை, சென்னை-600 002" என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செய்தி வெளியீட்டின் படிகள் தேர்வாணைய அலுவலகத்திலிருந்து வழங்கப்படமாட்டா.

தேர்வுகளின் முடிவினைத் தேர்வாணையத்தின் இணையதளம் வாயிலாகவும் அறியலாம். இது அவ்வப்போது புதுப்பிக்கப்படும்.

திருமதி வெ.ஷோபனா, இ.ஆ.ப.,
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்

தொலைபேசி: 044 – 25300300
நிகரி : 044 – 25300598
இணையதளம்: www.tnpsc.gov.in
மின்னஞ்சல் : coetnpsc.tn@nic.in
**Toll Free No: 1800 425 1002**